**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**CC.No.160/2023**

Deposition of **PW-8** **LW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. கார்த்திக் | **Age** | : | 39/2026 |
| **Father's Name** | : | திரு. சந்திரசேகரன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | பெரியகுளம் | **Calling** | : | மருத்துவர் |
| **Taluk** | : | பெரியகுளம் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29/07/2026.**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் பெரியகுளம் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.02.2023 ஆம் தேதி நான் உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் வேறிடைப் பணியில் இருந்த போது மதியம் சுமார் 12.05 மணியளவில் பிருத்திவிராஜ் த/பெ. முருகானந்தம் என்ற 28 வயதுடடைய ஆண் சிகிச்சைக்காக வந்தார். அவரை விசாரித்தபோது, தன்னை தெரிந்த மூன்று நபர்கள் தன்னை கைகள், கல் மற்றும் அருவாளால் காலை சுமார் 11.15 மணியளவில் கோம்பை தோட்டம், அருகில் வைத்து தன்னை தாக்கியதாக கூறினார்.

2. அவரை பரிசோதித்த போது அவருக்கு

a. வலது காலில் 3X2 cm அளவில் 4 சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டன.

b. இடது கை கட்டைவிரலில் வலி இருப்பதாகவும் அதனை அசைக்க முடியவில்லை என்றும் கூறினார்.

c. இடதுபுற நெஞ்சுப் பகுதியில் வலி இருப்பதாக கூறினார்.

d. வலது கன்னத்திலும் வலி இருப்பதாகக் கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்கையளித்தேன். அவர் 16.02.2023 ம் தேதி முதல் 21.02.2023 ம் தேதி வரையில் இருந்தார். அவருக்கு வலது கை கட்டைவிரல் எலும்பு மற்றும் நெஞ்சுப் பகுதியில் வலி இருப்பதாகச் சொன்னதால் அவரை மேல் சிகிச்சைக்காக க.விலக்கு மருத்துவமனைக்கு வெளிநோயாளியாக பரிந்துரை செய்தேன்.

3) அங்கு அவர் மேற்சிகிச்சைக்கு செல்லாததால் அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து கருத்துரை வழங்க இயலாது என சான்று வழங்கினேன். **(பிருத்திவிராஜ் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காய கருத்துரை அ.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

4) காயம் பட்ட நபர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்த விபரத்தை நான் தான் காவல் நிலையத்திற்கு சொன்னேன் என்றால் சரிதான். எனது முன்னிலையில் காயம் பட்ட நபரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் என் முன்னிலையில் பதிவு செய்யவில்லை. காயம் பட்ட நபருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் சிராய்ப்பு காயங்கள் காலின் முன் பகுதியில் ஏற்பட்டதா பின்பகுதியில் ஏற்பட்டதா என்ற விபரம் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

5. இரண்டு முதல் நான்கு காயங்கள் காயம் பட்டதாக சொல்லப்படும் நபர் சொன்னதின் அடிப்படையில் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதனை பரிசோதித்துப் பார்த்து அறிய இயலாது என்றால் சரிதான். வலி என சொல்லப்படுவது காயம் பட்டதாக சொல்லப்படும் நபர் மிகைப்படுத்தி கூட சொல்ல வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம் பட்ட நபருக்கு இரண்டு முதல் நான்கு காயங்களுக்கு நாங்கள் சிறப்பு சிகிச்சை அளிக்கவில்லை என்றால் வலி

நிவாரணி மாத்திரை கொடுக்கப்பட்டிருந்தது மேல் சிகிச்சைக்காக பரிந்துரை மட்டும் செய்தேன்.

6. கத்தி மற்றும் அருவாள் இரண்டும் வெவ்வேறு வகையான ஆயுதங்களை குறிக்கும் என்றால் சரிதான். காயம் பட்ட நபர் தன்னை கத்தி போன்ற அருவாளால் தாக்கியதாகத்தான் சொன்னார் காயம்பட்டதாக சொல்லப்படும் நபருக்கு ஏற்பட்ட சிராய்ப்பு காயங்கள் ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் சென்று கீழே விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம் பட்டதாக சொல்லும் நபர் தான் காலை 11:15 மணிக்கு காயப்பட்டதாகச் சொன்னார் என்றால் சரிதான். அதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவும் அந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.29 17:43:07 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.